தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிறுவன நாள் மற்றும் தொலைதூரக் கல்வி பட்டத்தகுதி பெறும் விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 45வது நிறுவன நாள் மற்றும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் இளநிலை பண்ணை தொழில்நுட்பப் பட்ட தகுதி பெறும் விழா இன்று (1-7-2015) பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற்றது.

முனைவர் கு.ரா. ஆனந்தகுமார், பதிவாளர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் பல்கலைக்கழகம் பெற்ற சிறப்புகளையும், விருதுகளையும் பற்றி எடுத்துரைத்தார். பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் நாட்டிலேயே சிறந்த துணைவேந்தர் என்ற பெருமை வாய்ந்தவர் என்றும் கூறினார்.

முனைவர் பி. சாந்தி, இயக்குநர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம் அவர்கள் இளநிலை பண்ணை தொழில்நுட்பப் படிப்பு, அதன் சேர்க்கை முறை, கல்வித் தகுதி ஆகியவற்றை விளக்கினார். 1250 மாணவர்கள் கற்று வருவதாகவும், முதலில் 155 பேர் தகுதிச் சான்றிதழ் பெற்று இந்த ஆண்டு பட்டதாரிகளாக உள்ளனர் என்றும் கூறினார். விவசாயப் பெருமக்களை தொழில் முனைவோர்களாகவும் அறிவியல் சார்ந்த உற்பத்தி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி முன்னேற்றமடைய செய்ய 6 பருவங்கள், 120 நேர்முகப் பயிற்சி வகுப்புகளுடன் 3 ஆண்டு பாடத்திட்டம் நடத்தப்படுவதாகவும் கூறினார்.

மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் அவர்கள் விவசாயிகளை முன்னேற்ற பாடுபடும் பல்கலைக்கழக செயல்பாடுகளை வாழ்த்தி பட்டதாரி வேளாண்மையாளர்களுக்கு தன்னுடைய பாராட்டுகளையும் தெரிவித்தார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் வி.எம். முத்துக்குமார் அவர்கள் அரசு இயந்திரம் முறையாக செயல்பட ஆணிவேராக தொழில்நுட்ப வல்லுநர்கள், துணைப் பணியாளர்கள் அனைவரும் அப்பழுக்கற்ற சேவை ஆற்றினால்தான் முடியும் என்றார். இளைஞர்கள் எல்லோரும் இணையப் பயன்பாட்டில் மிக்க முன்னேற்றம் கண்டுள்ளனர், சிறந்த குடிமகன்களாக விளங்க வாசிப்பை நேசிக்க வேண்டும் என்றார். உயிர் வாழ சுவாசிப்பு முக்கியம் என்பது போல வாழ்ந்து தழைக்க வாசிப்பு முக்கியம் என்றார். தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்கலாம் என்றார். வெற்றியில் பணிவும், தோல்வியில் அமைதியும் வேண்டும் என்று கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் கு. இராமசாமி, அவர்கள் தனது முக்கிய உரையில், 4 கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள், 7 சிறப்பு ஆராய்ச்சி மையங்கள் ஆகியவை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக அரசுக்கு நன்றி கூறினார். 2100 பண்ணைத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கியது, பல்கலைக்கழக நூலகத்தை மேம்படுத்த உதவியது, மாணவ, மாணவிகளுக்கு உதவித் தொகை அளிப்பது போன்ற திட்டங்களுக்காக நன்றி கூறினார். நாட்டிலேயே தமிழகத்தில் மட்டும்தான் இரு பருவங்களில் மழை பெய்கிறது அதை பயன்படுத்தி இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்று உறுதியளித்தார். நாட்டிலேயே முதலாவதாக இருக்கும் பல்கலைக்கழகம் மிக விரைவில் உலகிலேயே முதல் பல்கலைக்கழகமாக முன்னேற்ற உழவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

வேளாண்மை இயக்குநர் திரு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,, அவர்கள் பட்டதாரி வேளாண்மையாளர்கள் தனக்கு கிடைத்த தொழில்நுட்ப அறிவை மற்ற விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றார்.

வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், திரு. ராஜேஷ் லக்கானி, அவர்கள் தனது நிறுவன நாள் விழா உரையில், அரசின் தாரக மந்திரமான இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு இலாபம் என்ற முனைப்புடன் இரண்டாம் பசுமைப்புரட்சிக்கு வித்திட நெல் மற்றும் பயறு உற்பத்தியை இருமடங்காக்கவும், சிறுதானிய உற்பத்தியை மும்மடங்காக்கவும் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

மாண்புமிகு கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் முனைவர் கணபதி பா. ராஜ்குமார் அவர்கள் வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆட்சிப் பணிகள், வனப் பணிகளில் சிறந்து விளங்குவதாகக் கூறினார்.

மாண்புமிகு தமிழக சட்டமன்ற துணை சபாநாயகர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் 21 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு கோவையில் சிறப்பாக 4 ½ இலட்சம் ஏக்கரில் விவசாயம் நடைபெறுகிறது என்றார். இஸ்ரெயில் தொழில்நுட்பம் மூலம் குறைந்த நீரில் நிறைந்த பயிர் உற்பத்தி என்ற இலக்குடன் செயல்படுகிறது என்றார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் சிறப்புரையில், கோவை மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை விளக்கி பேசினார். உணவு உற்பத்தியில் கிருஷி கர்மான் விருது பெற்ற அரசு வேளாண் துறை 43 கோடி மதிப்பிலான இடுபொருட்கள் விநியோகம் நுண்நீர் பாசனத்திற்கு சிறுகுறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியம் மற்ற விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் ஒரு ஏக்கர் என்ற உச்சவரம்பு வீதம், வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு ரூ 28 கோடி செலவில் காப்பீட்டு பிரீமியத் தொகையை அரசே ஏற்று டான்பெட் நிறுவனத்திற்கு 580 கோடி வட்டியில்லா முன் பணம் மற்றும் கடன் உதவி மூலம் தடையில்லா உரம் கிடைக்க வழி செய்தது, வேளாண் இயந்திரங்கள் வாங்க 196 கோடி மானியம், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை தஞ்சாவூர், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் 190 கோடி செலவில் தோட்டக்கலை மற்றும் வேளாண் கல்லூரிகள், 88 நவீன கிடங்குகள், 70 குளிர்பதன கிடங்குகள் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார்.

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. ஆர். வைத்திலிங்கம், அவர்கள் தமிழகத்தையே சோலையாக மாற்றி இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திடுவதே அரசின் நோக்கம் என்றார். கல்வியில், வேளாண்மையில் சிறந்தால்தான் நாடு முன்னேற்றமடையும் என்றார். வட்டியில்லா கடனாக 5500 கோடி விவசாயிகளுக்கு வழங்கியது, முல்லைப் பெரியார் நீர் மட்டம் 148 அடியாக உயர்த்த வழிவகுத்தது, காவிரி நீர் பங்கீட்டுக்கு முறைப்படுத்த வழிவகுத்தது, இலவச மின்சாரம், இடுபொருட்கள் விநியோகம், உயிர் உரம், ஜிப்சம் வழங்குதல் போன்ற திட்டங்களின் மூலம் நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயத்தை முன்னேற்ற அரசு பாடுபடுகிறது. அதற்கு

பல்கலைக்கழகமும், வேளாண் துறையும் துணை நிற்கிறது என்றார். வேளாண் வளர்ச்சி மூலம் தமிழகத்தை நாட்டிலும், உலகிலும் முதல் மாநிலமாக மாற்ற முடியும் என்றார்.

விழா நிறைவில், சிறந்த ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், விரிவாக்கப் பணியாளர்கள், கல்லூரி, ஆராய்ச்சி நிலையம், வேளாண் அறிவியல் மையம், பெண் விஞ்ஞானி, விதை உற்பத்தி மையம், நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் ஆகிய பிரிவுகளில் 30 நபர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

25 வருடம் அப்பழுக்கற்ற சேவை புரிந்தவர்களுக்கும், 155 இளநிலை பண்ணைப் பட்டப்படிப்பு படித்த விவசாயிகளுக்கு பட்டப்படிப்பு தகுதி சான்றிதழும் வழங்கப்பட்டது. இறுதியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர். ம. மகேஸ்வரன், அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


45 ஆவது நிறுவன நாள் மற்றும்
45th FOUNDATION DAY AND
1st JULY 2015
AGRICULTURAL UNIVERSITY, COIMBATORE
TNAU


45 ஆவது நிறுவன நாள் மற்றும்
AND
TNAU


45ஆவது நிறுவன நாள் மற்றும்
45th FOUNDATION DAY AND
1st JULY 2015


45ஆவது நிறுவன நாள் மற்றும்
45th FOUNDATION DAY AND


45 ஆவது நிறுவன நாள் மற்றும்
45th FOUNDATION DAY AND
1st JULY 2015


45 ஆவது நிறுவன நாள்
45th FOUNDATION DAY


45ஆவது நிறுவன நாள் மற்றும்
OPEN
DAY AND
2015
UNIVERSITY,